**செய்தி வெளியீடு எண்: 466** **நாள்: 23.09.2016**

# செய்தி வெளியீடு

ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களின் கனிவான கவனத்திற்கு.........

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு ஆன் லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**மகளிர் நிலம் வாங்கும் திட்டம்** - பெண்களுக்கு மட்டும், **நிலம் மேம்படுத்துதல்** – இரு பாலாருக்கும் வயது வரம்பு 18 முதல் 65 வரை, குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்:** இத்திட்டத்தில் தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் மூலம் வாகனத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர் ஓட்டுநர் உரிமம் மற்றும் Badge மேலொப்பம் பெற்றிருக்க வேண்டும், மேலும் பெட்ரோல், டீசல் எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல், 18 முதல் 65 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். பெட்ரோல், டீசல், எரிவாயு விற்பனை சில்லரை நிலையம் அமைப்பதற்கு வருமான உச்ச வரம்பு ஏதும் இல்லை.

**இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்:** 18 முதல் 65 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். வாகனத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர் ஓட்டுநர் உரிமம் மற்றும் Badge மேலொப்பம் பெற்றிருக்க வேண்டும். மருத்துவ மையம், மருந்தியல், கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் (Clinic, Pharmacy, Opticals, Physiotherapy, Medical Laboratory Formation and Development) மருத்துவமனை அமைக்கும் திட்டத்திற்கு வருமான உச்ச வரம்பு ஏதும் இல்லை. இதற்கு அரசு அங்கீகார நிறுவனத்தில் உரிய பதிவு செய்திருக்க வேண்டும்.

**சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி (ம) பொருளாதார கடனுதவி:** இத்திட்டத்தில் 18 முதல் 65 வயது வரை உள்ள பெண்கள், ஆண்கள், இருபாலரும், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் குறைந்தபட்சம் 5 எண்ணம் வரை ஆதிதிராவிடர்கள் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி:** இத்திட்டத்தில் ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள், 30 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு வயது வரம்பு இல்லை. (அதிகபட்சமாக ரூ.20,000/– வரை வழங்கப்படும்)

**மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி:** (அதிகபட்சமாக ரூ.30,000/– வரை வழங்கப்படும் )
**தாட்கோ தலைவர்விருப்புரிமை நிதி:** (அதிகபட்சமாக ரூ.1.00,000/– வரை வழங்கப்படும் )

மேற்படி திட்டங்களில் விதவைகள், மாற்றுத் திறனாளிகள், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகள், எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மகளிர்/ஆடவர், திருநங்கைகள், நலிந்த கலைஞர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும், இத்திட்டத்திற்கு வயது வரம்பு இல்லை.

**இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி (Civil Services Main Exam):** 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சமாகும். முதனிலை தேர்வு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**சட்டப்பட்டதாரிகளுக்கு நிதியுதவி:** 21 முதல் 45 வயது வரை உள்ளவர்கள் மத்திய/மாநில பார் கவுன்சிலில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

**தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி–1 முதல்நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதி உதவி (TNPSC Group-1):** 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3.00 இலட்சமாகும்.

**பட்டயக் கணக்கர்/செலவு கணக்கர்களுக்கு நிதி உதவி (Financial Assistance to CA/ICWA/CS passed candidates**: 25 முதல் 45 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம், குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு இத்திட்டத்திற்கு இல்லை.

மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற விரும்புபவர்கள் **http://application.tahdco.com** என்ற இணையதள முகவரிக்கு சென்று விண்ணப்பத்தினை ஆன்லைனில்பதிவு செய்யவேண்டும். பதிவு செய்யும் போது விண்ணப்பதாரர் பற்றிய விவரங்களுடன் குடும்ப அட்டை / இருப்பிட சான்று, சாதிச்சான்று, வருமானச்சான்று, கல்வி தகுதி மற்றும் வயதிற்கான ஆதார சான்றிற்கு (பள்ளி மாற்றுச் சான்று / வாக்காளர் அட்டை / ஓட்டுநர் உரிமம் / பான் கார்டு / ஆதார் அட்டை / மதிப்பெண் சான்று) இவற்றில் ஏதாவது ஒன்றையும் மற்றும் TIN நம்பர் உள்ள நிறுவனத்திடமிருந்து பெற்ற விலைப்புள்ளி, திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் குறிப்பிட்டு திட்ட அறிக்கை மற்றும் புகைப்படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

நிலம் வாங்கும் திட்டத்திற்கு மூல பத்திரம், விற்பனை உடன்படிக்கை பத்திரம், வில்லங்க சான்று, சர்வே எண், சிட்டா அடங்கல், நில பத்திரம் மற்றும் நிலம் விற்பவரது சாதி சான்று விவரங்களை பதிவு செய்து ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுபவர்களின் வசதிக்காக அனைத்து தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகங்களிலும் ரூ.20/– செலுத்தி விண்ணப்பிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதன்மை செயலாளர்/
மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**